**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**
**C.O.S. No. 19/2023**

**பி.வா.சா.2 / சையது மீரா முஹைதீன் / 22.04.2025**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. பிரதிவாதி ஈஸ்வரன் எனக்கு 7 வருடமாக பழக்கம். பிரதிவாதிக்கும் எனக்கும் வணிகரீதியாக தொடர்பு இருந்துள்ளது என்றால் சரிதான். வாதி நிறுவனத்தை பிரதிவாதி ஈஸ்வரன் எனக்கு எந்த வருடம் அறிமுகப்படுத்தினார் என்றால் 2019ம் ஆண்டு ஜுன் மாதத்தில் அறிமுகப்படுத்தினார். நான் தாக்கல் செய்துள்ள எனது பிரமாண வாக்குமூலத்தில் 3 வது பத்தியில் வாதி நிறுவனம் இந்துஸ்தான் லீவர் உற்பத்தி பொருட்களை பிரதிவாதிக்கு சப்ளை செய்யவில்லை எனக்கு தான் சப்ளை செய்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வாதி நிறுவனம் பிரதிவாதி ஈஸ்வரன் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஈவே பில்கள் பிரதிவாதி ஈஸ்வரன் பெயருக்கு தான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்துஸ்தான் லீவர் நிறுவனத்தின் சட்ட விதிமுறைகள் எனக்கு தெரியுமா என்றால் சொன்னால் தெரியும். வாதி நிறுவனத்தை பிரதிவாதி ஈஸ்வரன் எனக்கு அறிமுகப்படுத்திய தேதியில் ஈஸ்வரன் இந்துஸ்தான் லீவர் நிறுவனத்தில் வேலை செய்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். இந்துஸ்தான் லீவர் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் 3வது நபரை நிறுவன சட்ட விதிகளின் படி டீலர்களுக்கு அறிமுகப்படுத்த கூடாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்துஸ்தான் லீவர் நிறுவனம் உற்பத்தி செய்யும் பொருட்களை இன்வாய்ஸ்கள் இல்லாமல் விற்பனை செய்ய முடியாது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி எண்.2ல் வாதி நிறுவனம் எனக்கு இன்வாய்ஸ் பில் இல்லாமல் விற்பனை செய்ய பொருட்களை அனுப்பியதாக நான் கூறியிருந்தால் அது தவறு. இவ்வழக்கில் நான் என்னை ஒரு தரப்பினராக சேர்த்து கொள்ள மனு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி எண்.3ல் வாதி பிரதிவாதியிடமிருந்து அவரது காசோலைகளை மேற்படி வரவு செலவிற்கு பாதுகாப்பிற்காக வழங்குமாறு பிரதிவாதியிடம் கேட்டதன் அடிப்படையில் பிரதிவாதி வெற்று நிலையில் எந்தவொரு விவரமும் பூர்த்தி செய்யாமல் கையொப்பம் மட்டும்

போடப்பட்ட நிலையில் காசோலை எண்.001560 மற்றும் மேலும் 9 காசோலைகள் மொத்தம் 10 காசோலைகளை வாதி நிறுவனத்திற்கு வழங்கினார் என்று கூறியுள்ளதை நான் நேரில் பார்க்கவில்லை. மேற்படி சங்கதிகள் பிரதிவாதி சொன்னதன் அடிப்படையில் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்காக பிரதிவாதி பொறுப்பேற்று கொண்டு காசோலைகள் வழங்கியதற்கு ஆதரவாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டேனா என்றால் அதுபோல் எதுவும் ஏற்படுத்திக்கொள்வில்லை. தாவா வழக்கிற்கு பின்பு நான் நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் வாதி நிறுவனத்திற்கு கொடுக்கவேண்டிய தொகைக்கு கடிதம் எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்பு எனக்கு சப்ளை செய்த பொருட்களுக்கு பிரதிவாதி மீது இன்வாய்ஸ் உற்பத்தி செய்யப்பட்டது தொடர்பாக நான் ஜிஎஸ்டி கவுன்சிலில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. தாவா வழக்கிற்கு பின்பும் கூட வாதி நிறுவனத்திற்கு நான் தரவேண்டியதாக கூறும் தொகையை பொறுத்து நேரில் சென்று விளக்கம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்துஸ்தான் லீவர் நிறுவனத்தின் கலக்ஷன் ஏஜெண்ட் ராஜசேகர் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ராஜசேகரை எனக்கு நன்கு தெரியும் என்றும் அவரும் நானும் தொழில் ரீதியாக ஒரே அறையில் தங்கி வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக வணிக தொடர்பான வரவு செலவுகள் அனைத்தும் அவரவர்கள் வங்கி கணக்கில் இருந்து பரிவர்த்தனை செய்வது தான் வழக்கம் என்று சொன்னால் சரிதான். வாதி நிறுவனத்தின் கலெக்ஷ்ன் ஏஜெண்ட் ராஜசேகர் என்பவர் வாதி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கலெக்ஷ்ன் தொகையை வங்கியில் செலுத்திய போது வங்கியால் வழங்கப்பட்ட கவுண்ட்டர் ஃபைல் இரசீதை நான் அவருக்கு தெரியாமல் எடுத்து நான் வாதி நிறுவனத்திற்கு செலுத்தியதாக உண்மைக்கு மாறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் நேரடியாக வாதி நிறுவனத்திற்கு செலுத்திய தொகைக்கான கவுண்ட்டர் ஃபைல் அழிந்து விட்டது என்று நான் கூறியுள்ள நிலையில் அதனை வங்கியில் பெற்று என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்று கேட்டால் முயற்சி செய்கிறேன். வாதி நிறுவனத்திற்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே வியாபாரா ரீதியாக கொடுக்கல் வாங்கல் இருப்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு

ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி நிறுவனத்திற்கு நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு தொகை செலுத்த வேண்டியிருந்தால் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பேன் என்றும் வழக்கிற்கு பிறகும் கூட அதுபோன்ற நடவடிக்கைகளில் நான் ஈடுபடாததால் நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறு என்று சொன்னால் சரியல்ல. ஆகவே எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> : இல்லை.**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.04.22 20:10:53 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.